

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து திருத்தணி முஸ்லிம்களின் இடுகாட்டில் சுற்றுச்சூழல் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்ததற்காக அதன் நிர்வாகிகள் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ். சந்திரனை நேரில் சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்கள் மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சித்திக் அலி, அஜ்ஜி உள்ளனர்.



மதுரவாயல் தெற்குப் பகுதி, வார்டு–151, பூத்தப்பேடு,அன்னை சத்யா நகரில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரர் ச.சங்கர்கணேஷ் எம்.சி., ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் விழா தெருமுனை கூட்டம் மற்றும் 547 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தலைமை கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், ஜெ.விக்னேஷ்வரி, மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர், காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி.பாண்டிச்செல்வம், ஒன்றிய கழக செயலாளர் அ.ம. துரைவீரமணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வகுமார் எம்.சி, உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் சிறப்புரையாற்றினர்.

### சவுதி அரேபியாவில் – துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா: கிரிக்கெட் போட்டி!

## அயலக அணி வெங்கடேசன் – ஆரிப் மக்பூல் தொடங்கி வைத்தனர்!

தம்மாம், டிச. 19-

சவுதி அரேபியா தம்மாம் கிழக்கு மண்டலம் தி.மு.க. அயலக அணி மற்றும் என்.ஆர்.பி.ஐ.ஏ. இளைஞர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு NRTIA முதன்மைச் செயலாளர் மயிலாடுதுறை வெங்கடேசன் மற்றும் கழக அயலக அணி திருச்சி ஆரிப் மக்பூல் ஆகியோரின் ஆலோசனைக் கிணங்க கிழக்கு மண்டலம் தம்மாம் NRTIA விளையாட்டு அணி நூர் முஹம்மது மற்றும் ஜான் போஸ்கோ ஆகியோர் மாபெரும் கிரிக்கெட் போட்டியை திருவிழா போன்று ஏற்பாடு செய்திருந்தனர்.

மெட்ரோ நிறுவனத்தின் லிமிடெட் உரிமையாளரும் உமர் ஷெரீஃப், மேலாளர் இஸ்மாயில் ஆகியோர் ஸ்பான்சர் செய்திருந்தனர்.

இப்போட்டியை அயலக அணி மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிப் மக்பூல் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சவுதி அரேபியாவில் தமிழ் தொழிலதிபரும், பல தமிழருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தியவரும், யுனிவர்சல் நிறுவனத்தின் நிறுவனர் பக்ருதீன் கடந்த 40 வருடங்களாக இங்கு சமூக பணியாற்றி வரும் நாசு சவுக்கத் அலி மற்றும் பதர் அல் ராபியா மருத்துவமனை தாளாளர் பிஜு கல்லுமலை , நவா என்னும் நவரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள்.

சவுதி அரேபியாவில் வசிக்கும் தமிழர்கள் 8 மாவட்ட கிரிக்கெட் அணிகள் இப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார். இறுதியில் வெற்றி பெற்ற மதுரை அணிக்கு வெற்றிக்கோப்பைகள் வழங்கப்பட்டது, கிரிக்கெட் போட்டி நிகழ்ச்சியின் முடிவில் ஐந்தாம் ஆண்டு நிகழ்ச்சியை முன்னிட்டு விழாவை கொண்டாடும் வண்ணம் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. 300 நபருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இந்த விளையாட்டு திருவிழாவை NRTIAவின் கிளைகள் பொறுப்பாளர் முகவை சீனி முஹம்மது, மற்றும் பொருளாளர் கமால் பாஷா ஆகியோர் ஒருங்கிணைப்பில் நிகழ்ச்சிகள் இனிதே நடந்தேறியது.

NRTIA நிர்வாகிகள் முஹம்மது ஃபாரூக், திருச்சி யூனிஸ், காயல் முஹம்மது நூஹ், திருச்சி முஹம்மது அலி, பூவை அன்சாரி, அஜ்மல், சென்னை இம்ரான்,சென்னை அக்பர், அபூ ரயான், செட்டிநாடு மணி குமார் வெற்றி பெற்ற மதுரை அணிக்கு யுனிவர்சல் நிறுவனத்தார் பக்ருதீன் தன் நிறுவனத்தின் சார்பாக அனைவருக்கும் பரிசளித்தார் மற்றும் NRTIA நிர்வாக குழுவினர் அனைவருக்கும் சிறப்பு பரிசளித்தனர்.

இந்நிகழ்வில் தி.மு.க. அயலக அணியினர் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிப் மக்பூல் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்த இனிய நிகழ்ச்சியில் சவுதி அரேபியா கிழக்கு மண்டலத்தில் உள்ள அனைத்து தமிழ் அமைப்புகள், நிர்வாகிகள் மற்றும் 600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஒன்றியக் கழக செயலாளர் மீ.வே. கர்ணாகரன் தலைமையில் – துணை முதல்வர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு

# சோழவரம் தெற்கு ஒன்றியத்தில் இரண்டு நாள் தொடர் கபடிப் போட்டி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் பரிசு வழங்குகிறார்! கே.பி.சங்கர் – டாக்டர் ஜெ.அருண் பங்கேற்பு!

சென்னை, டிச.19-

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் இரண்டு நாள் தொடர் கபடிப் போட்டி 21.12.2024 சனிக்கிழமை மற்றும் 22.12.2024 ஞாயிற்றுக்கிழமைகளில் காந்தி நகர் ஆல்பா ஒமேகா பள்ளி எதிரில் நல்லூர் ஊராட்சியில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு காந்திநகர் கிளைக் கழக பிரதிநிதி க. பிரபு நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்து வரவேற்புரையாற்றுகிறார்.

சோழவரம் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் வழுதிகை நா.செல்வ சேகரன், ஏ.காசிம் முகமது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ. அரசு, இரா.விஜயன், பா.சேகர், பொன். கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளரும் ஒன்றிய துணை பெருந்தலைவருமான மீ.வே.கர்ணாகரன் தலைமை வகிக்கிறார்.

கபடிப் போட்டியை சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாதவரம் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஜெ.அருண்,

மாவட்ட நிர்வாகிகள் பா.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பரந்தாமன், ஜெ. மதன், டி.எ.ராஜி, இரா. முருகேசன், பி.சாந்தி, எஸ். நந்தகோபால், புழல் எம். நாராயணன், ஜி.தயாளன், சி. அற்புதராஜ், ஜி.ராஜேந்திரன், ஐ.ஜான், என்.முகிலன் மற்றும் எஸ்.ஏ.சீனிவாசன், ஆர். டி.மதன்குமார், எம்.எம். செந்தில், சன். முனியாண்டி, எம்.கோமலவள்ளி, எம்.அம்மு, பி. வெங்கடேசன், து. கோபால், வி.தியாகராஜன், ஜி.தேவ நேசன், சுந்தர்ராஜ், கு.தமிழ்மணி, ஆர்.டி. குமார், காஞ்சி சு.மதிவாணன், க.காசிநாதன், ரா. உதயராஜ், கே.ரவிக்குமார், ஜெ.அப்துல் ஆசன், கே. லட்சுமி காந்தன், மோகன சுந்தரம், சி.கோவிந்தராஜ், சி.ஏழுமலை மற்றும்

நா.பரசுராமன், ஆ.ச. அமான், மு.கீதா ராமன், வி.ஞானம், ஏ.பி.சந்திரன், ஜி.பூபாலன், ஜி.சுப்பிரமணி, இரா.கிருஷ்ண மூர்த்தி, எம்.ஜி.கார்த்திக், ஆர்.துளசி, எம்.ரத்தினமாலா, எஸ்.சரஸ்வதி, ஜெ.சிவகாமி, ஆர்.ராதிகா, எஸ்.எம்.கே.ஜாகிர் உசேன், பி.கருணாநிதி, எம்.ரமேஷ் குமார், சி. ஜெகன், யு.ஜீவா, ஜெ. வேலாயுதம், மு. சீனிவாசன், ஜி.வேதா, டி. பத்மநாபன், பி.ஜோசப் பாரி, ப.சு.க. இளங்கோவன், மு.முஹமது அலி, கு.கலைவாணன், சி.ஜே. ராஜசேகர், ராவ் அ.து. மணி, எம்.சந்திரமௌலி, ஜே.ராம்ஜி,

கே.கீதா, மாலதி மகேந்திரன், வி.சந்திரா வாசுதேவன், டி.ரேவதி துரைவேல், ருக்மணி ரவிச்சந்திரன், சுகவேணி முருகன், தீபா நாகராஜ், கே.தமிழ்வாணன், ஜி.வேதா, பா.ஸ்ரீதர், எ. குப்புசாமி, சி.தனலட்சுமி சீனிவாசன், ஸ்வீட்டி கோபி, வெங்கட்ராமன், கிரிஜா நித்தியானந்தம், ஜி.சி.சந்தோஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை காந்திநகர் கிளைக் கழக பிரதிநிதி க.பிரபு செய்துள்ளார்.

நிறைவில் ஆர்.சி.சிவசங்கர், ஜெ.சரவணன், எம்.சரவணன், எம்.கிரிதரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! விஜய் வெங்கடேசன், சு.மோகன் தலைமையில்

# சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் அறுசுவை உணவு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – எஸ்.முரளி பங்கேற்பு! ம.ப.அன்பு – விமலா கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

சென்னை, டிச. 19-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் மற்றும் மயிலை கிழக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் சு,மோகன் ஆகியோரின் ஏற்பாட்டில் இன்று (19.12.2024 - வியாழக்கிழமை) நண்பகல் 12.30 மணியளவில் மயிலாப்பூர் லஸ் சந்திப்பு, கபாலீஸ்வரர் கோயில் குளம், இந்தியன் வங்கி அருகில் கழக கொடி ஏற்றி, மரியாதை செலுத்தி மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

மயிலை 124 அ வட்ட பொறுப்பாளர் ம.ப.அன்பு, மாமன்ற உறுப்பினர் விமலா கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி ஆகியோர் தலைமையில் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் ச. தேவராசு, துணை தலைவர் எஸ்.பாலகிருஷ்ணன், இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளராகள்

அயன் ரமேஷ், MAS செந்தில் குமார், இரா. சதாசிவம், ச.ஸ்ரீதர், ர.வரதராஜன், எம்.ஜி.சேகரன் வரவேற்கின்றனர்.

மயிலை கிழக்கு பகுதி, பகுதி தலைவர் டில்லி, மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் க.கணபதி, மயிலை மேற்கு பகுதி தலைவர் பி.எஸ். ஆறுமுகம் நன்றியுரை கூறுகின்றனர்.

இந்நிகழ்வில் தியாகராயர் நகர் மேற்கு பகுதி அமைப்பாளர் ராம்பாபு, பகுதி அமைப்பாளர்கள் CRPK சுரேஷ், கே.ஆர். குமார், ராயர், சதிஷ், இந்திரகுமார், சிங்காரவேல், ராஜேஷ், கந்தசாமி, பிரபாகர், திருவேங்கடம், எஸ்.ராஜேந்திரன், ஏழுமலை, அனு, ஸ்ரீதர் முனிவேல், கரீம்கான், தணிகாசலம், கவுதம், எஸ்.அரிச்சந்திரன், குறளரசன் மற்றும் கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ், அ.தவனேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பொன்னுசாமி, 124 அ வட்ட நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

### துறைமுகம் மேற்குப் பகுதி

# 57 (அ) வட்டப் பாக முகவர் இ.லோகநாதன் மறைவு!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி - – வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை அஞ்சலி!

சென்னை, டிச. 19 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 57 (அ) வட்டம், 125 வது பாகமுகவர் இ.லோகநாதன் நேற்று (18.12.2024 - புதன்கிழமை) அதிகாலை 4.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்னாரது உடலுக்கு துறைமுகம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். உடன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி, வட்டக் கழகச் செயலாளர்கள் பா.அண்ணாதுரை, ஆ.நா.பார்த்திபன், தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார், அவைத் தலைவர் கே.ஜி. துளசிராமன், பொருளாளர் ஆவின் சந்திரசேகர், துணைச் செயலாளர்கள் சி.காந்தி, கே.பவானி, பகுதி பிரதிநிதிகள் தேவகானம்ராஜா, கேபிள் சங்கர் மற்றும் ஜெ.ஹரிக்குமார், வட்டக் கழக மூத்த முன்னோடி சு.அண்ணாதாசன், 57 வது வட்டப் பொருளாளர் இ.மாயா, விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.வேலாயுதம், நெசவாளர் அணி மாவட்ட துணை பா.நடராஜ், மகளிர் தொண்டரணி பகுதி துணை அமைப்பாளர் எம்.ஆனந்தி, பாக முகவர்கள் ராம்குமார், இ.பாபுராவ், பன்னீர்செல்வம் மற்றும் மிண்ட் பாலு, அருண், பவானி, கலை ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர். நேற்று (18.12.2024 - புதன்கிழமை) மாலை 4 மணியளவில், கொடுங்கையூர் இடுகாட்டில் உடல் தகனம் செய்யப்பட்டது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, 122வது வட்டத்தில், தென் மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு வி.ஜான்சன், வட்ட பகுதி பிரிதிநிதி டி.அருள்சாமி ஆகியோர் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் முன்னிலையில், 15.12.2024, ஞாயிற்றுக்கிழமை அன்று தேனாம்பேட்டை, எஸ்.எம்.நகர், ஏ முதல் ஜெ பிளாக் வரை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கழக கொடியேற்றி, அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு – சி.எச். சேகர் ஆலோசனை வழங்குகின்றனர்!

# சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க.பா. பிரதீப்குமார் வேண்டுகோள்!

சென்னை, டிச.19-

சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தகவல் தொழில் நுட்ப அணியின் சென்னை மண்டலச் செயலாளர் சி.எச்.சேகர் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள் - என்று மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க.பா. பிரதீப் குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப் பாளர் க.பா. பிரதீப் குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று (19.12.2024 - வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் எம்.கே.டி. மஹால், ஸ்ட்ரஹான்ஸ் சாலை, ஓட்டேரி, சென்னை 600012 என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் இந்து சமயம் அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியின் சென்னை மண்டல செயலாளர் சி.எச்.சேகர் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே தகவல் தொழில்நுட்ப அணியை சார்ந்த (களப்பணி, சமூக வலைதளம் மற்றும் மகளிர்) மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 26/12/2024 அன்று நடைபெறும் மண்டலம் ஆய்வுக் கூட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க.பா. பிரதீப் குமார் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அறிவுறுத்தலின்படி 5 வது மண்டல குழு தலைவர் தாம்பரம் மேற்குபகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் தாம்பரம் மேற்கு பகுதி 46வது வட்டத்தில் மாமன்ற உறுப்பினர் ரமணிஆதிமூலம் அவர்களோடு அந்த வட்டத்தில் சமீபத்திய மழையால் பாதிக்கபட்ட சாலைகள் கால்வாய்களை நேரில் பார்வையிட்டார் குடிநீர் மற்றும் துப்புரவு பணிகள் சரிவர நடக்கிறதா என்று ஆய்வு மேற்கொண்டார் இதே போல 66, 67, 68, 69,70 ஆகிய வார்டுகளில் மழையால் பாதிக்கபட்ட பகுதிகளை பார்வையிட்டு பிரச்சனைகளை சரி செய்ய மாநகராட்சி அதிகாரிகளிடமும் கலந்து ஆலோசனைகளை மேற் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார் 66வது வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்ட பட்டு வரும் நியாய விலை கடையின் கட்டிடத்தை பார்வையிட்டார் பணிகளை துரித படுத்தினர்.



சவுதி அரேபியா தமாம் கிழக்கு மண்டலம் கழக அயலக அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிரிக்கட் போட்டி தமாமில் நூர் முகமது,ஜான் போஸ்கோ ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இப் போட்டியை கழக அயலக அணி மயிலாடுதுறை வெங்கடேஷன், திருச்சிஆரிப் மக்பூல் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் சவுதி அரேபியாவில் வசிக்கும் 8 மாவட்ட தமிழ் இளைஞர்கள் பங்கேற்றனர்.